Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 2/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | நரேஷ்குமார் | Calling: | கூலி |
| Father's/Husband's Name: | குப்பன் | Religion: | |
| Village: | நேதாஜி நகர் | Age: | 29 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 10.07.2026 நேரம் : 11.57 AM

(எதிரிகள் ஆஜர் . )

அ.சா.1 முதன்மை விசாரணை.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. அப்போது இருட்டில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதனால் எனக்கு தலையில் அடிப்பட்டு விட்டது. அதில் ஏற்பட்ட காயத்திற்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை போலிசார் ஒரு வெள்ளை தாளில் வாங்கிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த சமாதான மனு அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் அதில்உள்ள விவரங்கள் இன்றைய தேதிவரை தெரியாது என்றாலும் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நரேஷ்குமார்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.10
18:08:55
+0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 2/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | சுரேஷ் | Calling: | கூலி |
| Father's/Husband's Name: | ரகு | Religion: | |
| Village: | கோணேமேடு | Age: | 27 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 10.07.2026 நேரம் : 12.02 PM

(எதிரிகள் ஆஜர் . )

அ.சா.2 முதன்மை விசாரணை.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு திருவிழா நடந்தது. அப்போது அங்கு கூட்டத்தில் சண்டை நடந்தது. யாருக்கு என்று தெரியாது. எனக்கு தலையில் அடிப்பட்டது. இருட்டில் என்ன நடந்தது என்று தெரியாது.தலையில் காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலிசார் ஒரு வெள்ளை தாளில் வாங்கிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரிக்கும் போதும் நான் முதன்மை சாட்சியத்தில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன் என்றால் சரிதான். இன்றைய தேதிவரை என்னை யார் அடித்தார்கள் என தெரியாது என்றால் சரிதான்.

மறுவிவாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சுரேஷ்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.10 18:09:03 +0530

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC . No. 2/2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –3

| | | | |
|---|---|---|---|
| Name: | தம்பிதுரை | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | மாதப்பன் | Religion: | |
| Village: | சொட்டான்டப்பட்டி | Age: | 30 |
| Taluk: | காரியமங்கலம், தர்மபுரி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 10.07.2026 நேரம் : 03.38 PM

(எதிரி ஆஜர். )

அ.சா.3 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் டேவிட்விமல்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. பிரகாசம் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம்மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.05.2018 ம் தேதி வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பு அலுவலில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. பிரகாசம் என்பவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நரேஷ் என்பவரை

விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். நரேஷ் என்பவரின் புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அதன் தன்மைக்கு ஏற்ப வாணியம்பாடி நகர காவல் நிலைய குற்ற எண். 144/2018 சட்டப்பிரிவுகள் 294(பி), 324,506(ii) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார்.

பின்னர் அவரே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 09.05.2018 ம் தேதி சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முருகன்,பிச்சான்டி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 5 மற்றும் அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய 2 அடி நீளமுள்ள இரும்பு ராடை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 அடி நீளமுள்ள இரும்பு ராடு சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார். **படிவம் 91 அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் நரேஷ்குமார், சுரேஷ்,முருகன், பிச்சான்டி ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரிகளான விஷ்ணு, வீனஸ் ஆகியோர்களை 10.05.2018 நேதாஜீ நகர் SBI ATM அருகில் கைது செய்து தக்க வழக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான நரேஷ்குமார், சுரேஷ் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. டேவிட்விமல்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ்கள் பெற்றார். **நரேஷ்குமார் மற்றும் சுரேஷ் ஆகியோர்களின் காயச்சான்றிதழ் முறையே அ.த.சா.ஆ 9 ஆக மற்றும் அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி), 324,506(ii) IPC என இறுதி

அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 தானே கீழே விழுந்துவிட்டதாகவும், மருத்துவமனைக்கு வந்தபோது போலிசார் என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.2 சம்பவயிடம் இருட்டாக இருந்ததால் அங்கு யார் எங்களை தாக்கியது என தெரியவில்லை எனவும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல், சான்றாவணங்களை காவல் நிலையத்திலே வைத்து தாயாரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிகளை சொல்லும் நேரத்தில் சொல்லும் இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி கையொப்பம்
(ஒம்.) தம்பிதுரை

SRIPATHI K

SRIPATHI K
2026.07.10
18:09:09
+0530